பதிவு எண் : M. 6311 ★ தோலேபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்

மலர் : 16] சென்னை : ஆவணி 1 (16—8—68) வெள்ளி ★ வெளியூர் : ஆவணி 2 (17—8—68) சனி [இதழ் : 53

உயர்ந்த அளவில் வாழ்க்கைச் செலவு!

டிரீநகர், ஆக. 16— நாட்டின் இரு பருநிகளிலில், லடாக் லில் வாழ்க்கைத்தரம் 90-சதவிகிதம் அதிகமாகும்.

தொழில் அரிவிலிலாத ஊழியர் ஒருவரின் நாள் வருமானம், நாட்டிலேயே இல்லாதான் மிக அதிகமாக இருக்கிறது: அதாவது, ஒருவரின் நாள் கூலி ரு. 5.8ஆல்—16க்கும் இடையில் அமைந்திருக்கிறது.

ஒரு சாதாரணக் குடும்பம் சராசரி நாளொன்றுக்கு ரு. 40-லிருந்து ரு. 50 வரை சம்பாதிக்கிறதாம்.

லடாக் பகுதி மக்கள் வருமான வரி ஏதும் கட்டுவதிலில்ல.

அந்நியரால் ஏற்படக்கூடிய ஆபத்தைவிடக் கொடுமை வாய்ந்தது--

'சுதந்தரம் வந்து நாம் கண்ட சுகம் என்ன?' என்ற சலிப்பு உணர்ச்சி!

உழைப்பின் பலனைச் சுரண்டுவோர் சுதந்தரத்தின் பகைவர்கள்!

பாடுபடப் பல்லோர்-பலனைப் பெற ஒரு சிறு பிரிவினரா?

பொது நீதி நல்லுரையாக மட்டும் இல்லாமல் நடைமுறை நீதியாதல் வேண்டும்

நாடு அப்போதுதான் புத்தொளியும் புதுவாழ்வும் பெற்றிடும்-- வானொலியில் முதலமைச்சர் அண்ணு ஆய்வுரை

சென்னை, ஆக. 15—

"பெற்ற சுதந்தரம் ஒரு சிலருக்காக அல்ல -- அனைவருக்குமே! நாட்டுச் செல்வமும் வளமும் ஒரு சிலருக்காக அல்ல -- அனைவருக்குமே! பாடுபடுவதும் பலன் தருவதும் பொது நீதியாக இருந்திட வேண்டும்; நாடு அப்போதுதான் புத்தொளி பெற்றிடும் -- புது வாழ்வு பெற்றிடும்"

என்று தமிழக முதலமைச்சர் அண்ணு அவர்கள் சென்னை வானொலி நிலையத்திலிருந்து விடுத்த சுதந்தர நாள் செய்தியில் கூறினர்.

"நாட்டு வளத்தைப் பெருக்க உழைப்பவர் பெருமக்களும், தொழிலாளர்களும் அணி திரண்டு நிற்கவேண்டும்; அவர்களுடைய உழைப்புக்கு ஏற்றவண்ணம் அவர்களது வாழ்வு செம்மைப்பட வேண்டும்; இதற்கான சமூக நீதி நிலைத்திட வேண்டும்" என்றும் அவர் வற்புறுத்தினர்.

"மக்கள் தொகை பெருகிக்கொண்டே போகும் நமது நாட்டில், உற்பத்தியின் அளவு -- முறை -- வகை -- திறம் -- தரம் ஆகிய எதிலும் குறை ஏற்படக்கூடாது; இதன் நன்கு உணர்ந்து சுய ராஜ்யம் சுகராஜ்யமாகும் நிலை ஏற்பட அனைவரும் பாடுபட வேண்டும்" என்றும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார். அவரது உரை வருமாறு :—

"இன்று சுதந்தரத் திருநாள்— ஆகஸ்டு 15! அடிமைத் தனிகள் அறுபட்ட நாள் -- ஆங்கில ஏகாதிபத்தியம் அகன்ற நாள் -- நம்மை நாமே ஆண்டுகொள்ளும் உரிமையினைப் பெற்ற நாள் -- வெற்றித் திருநாள் -- விழா நாள்!

இந்தியா, பிரிட்டிஷ் பிடியிலிருந்து தனை விடுவித்துக்கொண்ட நாளை -- சுதந்தரம் பெற்ற நாளை -- ஒவ்வோர் ஆண்டும் விழாவாக்கி மகிழ்கிறோம்!

உலகிலே உள்ள பல்வேறு நாடுகளும், சுதந்தரத் திருநாளினை போது, நமக்கு வாழ்தருவ் செய்துக்கொண்டு மகிழ்கின்றனர்.

அடிமைப்பட்டுக் கிடக்கும் நாடுகளின் பட்டியலிலே இருந்து வந்த இந்தியா, உலக அரங்கிலே சுதந்தரம் பெற்ற நாடுகளின் வரிசையிலே பெருமிதத்துடனே வீறுநிருகரும் நிலையைப் பெற்றுத் தந்த நாளே 1947 ஆகஸ்டு 15!

நாட்டுக்கான புதிய வரலாற்றை, பொன் எழுத்துக்களால் எழுதத் துவங்கிய அந்த ஆகஸ்டு 15— ஓவ்வோர் ஆண்டும் நாட்டுக்குத் திருநாளாகிறது!

மகிழ்ச்சியும் எழுச்சியும் பெற்றிட -- வாழ்த்தும் வணக்கமும் கூறிட -- உறுதியும் அருகாமையும் பெற்றிட -- சுருகமாகக் கூறுவதானால் பெற்ற சுதந்தரத்துக்கு ஏற்றவர்களாக நம்மை ஆக்கிக்கொள்ள -- சுதந்தரத்தின் முழுப் பயன் நாட்டவர் அனைவரும் பெறுதிட -- அதற்கான அறிவாற்றலையும் பண்பாட்டையும் வளர்த்துக்கொள்ள -- இந்த ஆகஸ்டு 15!

வீரம்—வெற்றியைத் தந்தது; தியாகம்—சுதந்தரத்தைத் தந்தது! வீரமும் தியாகமும் போற்றத்தக்கவை; அதிலும், உலக உத்தமா காந்தியடிகள வகுத்தளித்த அறவெறி நின்று இந்தியா பெற்ற சுதந்தரம், உலக வரலாறுக்கே ஒரு புதுமையான தாகும்!

'இந்தியா விடுதலை பெற வேண்டும்' என்ற நல்லெண்ணம் கொண்டிருந்தவர்களிலேயே பலரும், இங்கும் சரி—வேறு நாடுகளிலும் சரி—'காந்தியடிகளின் போர் முறை பலன் தரும்' என்ற நம்பிக்கையைப் பெற்றிட முடியவில்லை — துவக்கத்தில்; ஆனால், ஆண்டுகள் செல்லச் செல்ல, 'விடுதலை பெற்றுக் வேண்டும்' என்ற ஆர்வமும், எழுச்சியும், 'அதற்காக எந்தத் தியாகமும் மேற்கொள்வோம்' என்ற உறுதியும், படித்தோரிடம் மட்டுமல்ல — பாமரர் என்று கூறப்படுவோரிடமும் எழுந்தது -- ஏகாதிபத்தியம் தகர்ந்தது!

இன்று அண்ணலுக்கும், அவர் காட்டிய பாதை நின்று அறப் போர் நடாத்தி --- இன்னுயிரை இழந்து --- தியாக பூமியாக இந்நாட்டை மாற்றி அமைத்தோருக்கும் நாட்டு மக்கள் அஞ்சலி செய்வது, முறை -- கடமை!

'அத்தகையோரின் வழிவழி வந்துள்ளோம்' என்று நினைவுபடுத்திக் கொள்வதும் எழுச்சி பெறுதிடத் தேவை!

'வல்லமை மிக்க ஒரு ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுபடும் ஆற்றலைப் பெற்றிட முடிந்தது' என்று எண்ணுமபோது, கடந்த காலத்தின் புகழ் ஒளி கண்களுக்குத் தெரிவது மட்டுமல்ல— 'இன்று நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் -- இன்னல்கள் நாம் தீர்த்துக்கொள்ளத் தக்க ஆற்றலைப் பெற்றிட முடியும்; பெறுவதுக் கொள்வோம்' என்ற உறுதியையும், 'அந்த உறுதி வழிநின்று பணியாற்றி, நாடடிலுள்ள புனனகைப் பூந்தோட்டமாக்கிட முடியும்' என்ற திடமான எண்ணமும் தோன்றி, எதிர்காலத்துப் பொன்னெழியும் நம் கண்களுக்குத் தெரிக்திடக்கூடிய நாள்—ஆகஸ்டு 15!

இன்று இலண்டனிலும், மால்கோவிலும், வாஷிங்டனிலும் டோக்கியோவிலும், பொலின், பாரிஸ், ரோம் போன்ற தலைநகரிகளிலெல்லாம், 'இந்தியா மிகப் பெரிய நாடு; பல்லெடுங் காலம் அடிமைப்பட்டுக்கிடந்தது; இருபத்தொரு ஆண்டுகளுக்கு முன்பு விடுதலை பெற்றது; இனறு அங்கு சுதந்தர நாள் விழா' என்று பேசுவர்— முகமலர்ச்சியுடன்!

முன்பு ?—அடிமைப்பட்டுக் கிடந்த போது ?—'ஐயோ, பாவம்' என்ற முறையிலும், 'அவர்களால் என்ன ஆகும்' என்ற முறையிலும், 'இந்தியாவா? அங்கு மக்கள் அஞ்சி அஞ்சிச் சாவார்; அவர் அஞ்சாத பொருளில்லே அனையிலே' என்ற விதமாகவும் இந்தியாவைப் பற்றிப் பேசினர்.

இன்று ?—'விடுதலே பெற்று--புது வாழ்வு பெற்று---இந்தியா இன்று ஒளிமயமான எதிர்காலதைப் பெற்றிடும் உறுதியுடன் விளங்குகிறது' என்று பாராட்டியும் வாழ்த்தியும் பேசுகின்றனர்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் பிடியிலே நாடு இருந்ததாலே வினாந்த கேடுகள் யாவை ?— வறுமை ; அறியாமை; சமூகத்தில் சோர்வு; தன்னம்பிக்கை யற்ற நிலை; திகைப்பு; தடுமாற்றம்; இயற்கை வளத்தையும் பயன்படுத்த முடியாத நிலைமை; உரிமையற்ற நிலைமை!

இத்தனே கேடுகளுக்கும் காரணம், 'இந்திய மக்கள் அறிவாற்றலற்றவர்கள்' என்பது அல்ல; அவர்கள், 'அடிமைத்தனத்திலே சிக்கிக் கொண்டதுதான்' என்ப தனே உலகப் பேரறிவாளர் உணர்ந்தனர்; எடுத்துரைத்தனர்; 'சுதந்தர இந்தியா இங்கக் கேடுகளற்ற நாடாகத் திகழ முடியும்' என்ற நம்பிக்கையைத் தெரிவித்தனர்.

சுதந்தரம் கிடைத்து இருபது ஆண்டுகளுக்கும் மேல் உருண்டோடிவிட்டன! இனி இங்கு இன்னலும் இழிவும், வறுமையும் அறியாமையும், சமூகத்தில் சோர்வும் சுரண்டல் முறையும் இருக்குமா? என்று உலகு, 'இதற்குக் காரணம் ஏகாதிபத்தியம்' என்று எங்ஙனம் கூற முடியும் ?

நம்மை நாமே அல்லவா ஆளுகின்றோம் ? நமது வாழ்வை அமைத்துக்கொள்ளும் பொறுப்பும் உரிமையும் நம்மிடமே அல்லவா இருக்கிறது ? பிற எவருடைய கட்டளைக்கும் காத்திருக்க வேண்டிய நிலையா இன்று ?--- இல்லையே! எனவே, உலகு கேட்கிறது--கேட்கத்தான் செய்யும்---உலகு என்ன---நம்மை உள்ளமே கூடக் கேட்கத்தானே செய்கிறது---'சுதந்தர நாடு ஆன பிறகு, நாட்டின் வளமும் வாழ்வும் எந்த அளவு பெருகி உள்ளன; 'சாமான்யர்கள்' என்ற பட்டியலிலே அடைபட்டுவிட்டிருக்கும் கோடிக் கணக்கான ஏழை எளியோர், உழவர், தொழிலாளர் எத்தகைய புது வாழ்வு பெற்றுள்ளர்' என்ற கேள்வி எழாமலிருக்க முடியுமா ?

அங்கியர் ஆண்டபோதே, 'இன்னல் துடைக்கப்பட வேண்டும்; வாழ்வு வளம் பெறவேண்டும்' என்று கேட்டோமே—'அந்நிலையைப் பெற்றளித்திட உன்னல் முடியாது; உனக்கு மனமும் எழாது' என்றரைத்தோமே— 'நம்மை நாமே ஆண்டிடின் மட்டுமே நலவு நிலை நாட்டுக்கு ஏற்ப படமுடியும்' என்றுகூறி, ஏகாதிபத்தியத்தை வீரட்டியதோமே— இன்று நம்மை நாமே ஆண்டு கொள்ளும் வாய்ப்பினே இருபது ஆண்டுகளுக்கும் மேலாகப் பெற்றுள்ளோம் -- எந்த அளவு நமது நோக்கம் ஈடேறியிருக்கிறது -- வாழ்வும் வளமும் சமூகத்தில் எந்த அளவு பரவியிருக்கிறது -- என்ற கேள்வியை நம்மை நாமே கேட்டுக்கொள்ள எத்தனே வேண்டும்! கனக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

'வளர்ச்சித் திட்டத்திற்கு மக்களே உதவ நிதி திரட்டப்படுகிறது'

ஆதரித்து வெற்றி பெறச் செய்யும் கடமை பற்றி முதலமைச்சர் அண்ணு

சென்னை, ஆக. 15—

"நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தையும் முழுமையாக நிறைவேற்ற வரிகள் மூலம் கிடைக்கும் வருமானம் மட்டும் போதாது—போதவும் இல்லே; எனவே, மக்கள் ஒவ்வொரு வரும் தாமே விரும்பிச் செலுத்தும்வகையில், தமிழக அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டம் தொடங்கப்பட்டு, வளர்ச்சிக்கு மேலும் நிதி திரட்டப்படுகிறது; இதனே அனைவரும் ஆதரித்து வெற்றி பெறச் செய்யவேண்டும்"

"இந்தப் பரிசுத் திட்டத்தில், தமிழக அமைச்சர்கள் எவரும் பங்குகொள்ளக் கூடாது என முடிவு செய்யப்பட்டிருக்கிறது"

என முதலமைச்சர் அண்ணு அவர்கள், தமிழக அரசின் பரிசுத் திட்ட விழாவில உரையாற்றுகையில் தெரிவித்தார். ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், இராஜாஜி மண்டபத்தில் பரிசுத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார். (திட்டத்தின் குறிக்கோள்கள் பற்றி அண்ணு ஆற்றிய உரையின் விவரம் பின்னர் வெளிவரும்.)

வாழ்க--இந்தி வெறி!

அறியாமையைப் போல் வேறு எதற்கும் அவ்வளவு துணிச்சல் கிடையாது; அதனால் தான், 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை' என்றார் வள்ளுவர்.

காலியான தலைகள் தான் நிமிர்ந்து நிற்கின்றன! அறிவுப் பாரமேறிய தலைகளோ, அஞ்சுவது அஞ்சித் தலை சாய்க்கின்றன!

மத்திய அரசின் உத்தரவுடன் ரிசர்வ் பாங்கி புதிதாக வெளியிட்டிருக்கும் பத்து ரூபாய் நோட்டைப் பார்த்த பிறகு, இப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது!

இந்தப் பத்து ரூபாய் இந்திப் பத்து ரூபாய்! இந்தியைத் திணிப்பதற்காகவே அச்சடிக்கப்பட்ட பத்து ரூபாய்!

இதுவரையில், நாணயங்களில்--நோட்டுகளில் இந்தி இல்லையா என்றால், இருந்தது---ஓர் அளவோடு!

ஆனால் இந்த முறை,

'பாரதீய ரிஜர்வ் பாங்க்'

அதில் இடம் பெற்றிருக்கிறது! ரிசர்வ் பாங்கி கவர்னர்

'லட்சுமி காந்த் ஜா'

என்று இந்தியில் கையெழுத்திட்டிருக்கிறார்!

கீழே இருந்த இந்தி, மேலே ஏறிக்கொண்டிருக்கிறது!

இந்தி மொழியைப் பொறுத்த வரையில்

நல்ல முன்னேற்றந்தான்!

ஆனால், இந்திக்காரர்களின் இந்த அற்பத்தனத்தை எண்ணி இந்திய மக்கள் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்!

ஏனென்றால், கல்யாணச் சந்தடியில் மணப்பெண்ணை மறந்துவிட்டு ஊர்வலம் புறப்பட்ட மாதிரி, சில முக்கியமான விஷயங்களை விட்டுவிட்டிருக்கிறார்கள்.

நாணயப் புழக்கத்தில் எவையெவை மிக முக்கியம் என்று கருதப்படுமோ அவை இதில் விடுபட்டிருக்கின்றன!

'I promise to pay the bearer on demand the sum of TEN RUPEES'

இது, பழைய பத்து ரூபாய் நோட்டில் உள்ள கவர்னரின் உறுதிமொழி.

திய பத்து ரூபாய் நோட்டிலோ,

'I promise to pay the bearer the sum of RUPEES TEN'

என்று இருக்கிறது!

முந்தியதில் இருந்த On Demand புதியதில் இல்லை. அதோடு,

'மை தாரகோ தல் ரூபியே அதா
கர்னே கா வசன் தேதா ஹூ'

என்ற இந்தி வாசகமும் ஏறிக்கொண்டது!

ரிசர்வ் பாங்கியின் ரூபாய் நோட்டு இது; அதனால், மத்திய அரசு தரவேண்டிய உறுதிமொழி ஒன்று உண்டு; அது இந்தியில்,

'கேந்த்ரிய சர்க்கார் துவாரா பிரத்யாபூத்'

என்று இளித்துக்கொண்டு நிற்கிறது. ஆனால் அதே நேரத்தில்,

'At any office of issue'

என்ற முக்கியமான சொற்றொடரைக் காணோம்!

இவ்வளவு சத்தான விஷயங்களை விட்டுவிட்டு, இந்திக்கு முதலிடம் தருவதற்காக மட்டுமே இந்த நோட்டை வெளியிட்டிருக்கிறார்கள்!

'சில நேரங்களில் பாவர்கூட இன்பமாக இருக்கிறது'

என்றான் ஆவேசக் கவிஞன் பைரன்.

இந்தி வெறியர்களுக்கு இன்பம் தரும் பாவந்தான் இது!

கையிலே மாற்று மருந்து இருக்கிறதென்று நினைத்துக் கொண்டு, இந்தி வெறியர்கள், விஷத்தை மெல்ல மெல்ல ஊட்டிக் கொண்டிருக்கிறார்கள்! வினையை விதைப்பவர்கள் வினையைத்தான் அறுப்பார்கள்!

இந்திக்காரர்களுக்கு இந்திவெறி வளர வளர மற்ற மொழிக்காரருக்கு நல்ல காலம் அணித்தே இருக்கிறது!

இந்தப் பத்துரூபாய் நோட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு இந்தி எதிர்ப்பாளரைத் தோற்றுவிக்கும்! இந்தியை எதிர்க்கும் அணிவகுப்பில் புதிய வரிசை பிறக்கும்!

நாணயத்தில் ஏறி மினுக்குவதாலே இந்திக்குச் சிறப்பு வந்துவிட்டதாய் யாரும் எக்காளம் இடவேண்டாம்!

காலைக் கதிரவனின் ஒளிபட்டுப் பளபளக்கும் புல்நுனிப் பனித்துளி இந்தச் செயற்கை வாழ்வு!

உதய சூரியனின் பொற்கதிர்கள் சூடேறிவிட்டால் பனித்துளியின் பகட்டுவாழ்வு நிமிடத்தில் சிதறிப் போம்!

அதற்கு இந்திக்காரர்களின் வெறி வழி செய்யும்!

வாழ்க இந்தி வெறி!

—முத்து

அன்று எதிர்ப்பு--இன்று கோரிக்கை!

அலகாபாத், ஆக. 16—

சென்ற ஆண்டில் ஆங்கில ஒழிப்புக் கிளர்ச்சியில் முக்கியப் பங்கெடுத்துக்கொண்ட அலகாபாத மாணவர்கள், இப்போது கல்லூரிகளில் பாடங்களை ஆங்கிலத்தில்தான் நடைபெற வேண்டுமென வற்புறுத்துகின்றனர்.

சென்ற ஆண்டு பி.ஏ. படிப்பில் ஆங்கிலத்தை நாடியவர்கள் 320-பேர்; இவ்வாண்டு அவர்களது எண்ணிக்கை 700-ஆக உயர்ந்துள்ளது.

ஆனால், போதிய மானியம் வழங்காமல் அதிகாரிகள் தகராறு செய்வதால், வேறு சிக்கனங்களைச் செய்து ஆங்கிலம் கற்பிப்பதற்கு வழி செய்திருக்கிறார்கள்.

ஓராண்டுக் காலத்திற்குள் 11 நவீன அரிசி ஆலைகள்

அமைச்சர் கே. ஏ. மதியழகன் தகவல்

மதுரை, ஆக. 14—

"இன்னும் ஓராண்டுக் காலத்திற்குள் தமிழ்நாட்டில், 11-அரிசி ஆலைகள் நவீன முறையில் நிறுவப்படும்; இவைகளை அமைக்க ரூ. 1-கோடிக்குமேல் செலவாகும்; இவைகள் அனைத்தும் கூட்டுறவுத் துறையிலேயே அமைக்கப்படும்"

என்று உணவுத் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இவைகளில் 5-ஆலைகள் தஞ்சை மாவட்டத்தில் ஏற்படும்; திருவையாறு, பட்டுக்கோட்டை, கும்பகோணம், மன்னார்குடி, மாயவரம் ஆகிய ஊர்களில் அந்த ஆலைகள் நிறுவப்படும்.

மதுரை, நெல்லை, கோவை, திருச்சி, தென்னாற்காடு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொரு அரிசி ஆலைகள் ஏற்படுத்தப்படும்.

குறுவை நெல் அறுவடைக்கு முன்பே இந்த ஆலைகள் அமைக்கப்பட்டுவிடும்.

பட்டுக்கோட்டையில் அமைக்க இருப்பது சற்றுச் சிறியதாகும்; அங்கு மணிக்கு 2-டன் நெல் அரைக்கப்படும்.

பாகிஸ்தானுக்கு சூ-யென்-லாய் வருகை

புதுடில்லி, ஆக. 14—

செஞ்சீனத் தலைமையமைச்சர் சூ யென்-லாயும், வெளிநாட்டு உறவுத்துறை அமைச்சர் சென்-யீயும் பாகிஸ்தானுக்கு வருகை தருமாறு கோரப்பட்டிருந்த அழைப்பை ஏற்றுக்கொண்டுவிட்டனராம்.

இதனைத் தெரிவித்த பாகிஸ்தான் வெளிநாட்டு உறவுத்துறை அமைச்சர் அர்ஷத் உசேன், சூழ்நிலை அனுமதிப்பதைப் பொறுத்து கூடிய விரைவில் பாகிஸ்தான் வருவதாக சூ-யென்-லாய் தம்மிடம் கூறியதாகத் தெரிவித்தார்.

கட்டபொம்மன் மாளிகையைப் பாதுகாக்க ஏற்பாடு

சென்னை, ஆக. 16—

பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மனின் அரண்மனையைப் பாதுகாக்கத் தமிழகப் புதை பொருள் இலாகாவினர் முன்வந்திருக்கின்றனர்.

கட்டபொம்மன் வாழ்ந்த அரண்மனையின் ஒரு பகுதி இடிந்து தரையோடு தரையாகிவிட்டது. அந்தப் பகுதிகளும் தோண்டப்பட்டு 'எந்த அளவுக்கு அரண்மனை விரிந்து அமைந்திருந்தது' என்பதைக் காட்ட இந்த இலாகாவினர் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மனை எதிர்த்துச் சண்டையிட்டு இறந்த 40 வெள்ளையர்களுக்கு இங்கு சமாதி இருக்கிறது; ஏற்கனவே இதனைப் புதை பொருள் இலாகாவினர் பாதுகாத்துவருகின்றனர்.

காஞ்சீபுரத்திலுள்ள சோழ காலக் கோவிலான சொக்கேசுவரர் ஆலயத்தையும் புதைப் பொருள் இலாகாவினர் பராமரிக்க முன்வந்திருக்கின்றனர்.

கழுகுமலைக்கு அருகிலுள்ள பாண்டியர் காலத்துப் பழம் பெரும் சின்னமான வட்டுவன் கோவிலையும் புதைப் பொருள் இலாகாவினர் பராமரிப்பர்; இந்தக் கோவில், பாறையில் செதுக்கப்பட்டிருக்கிறது.

வறண்ட பகுதியில் கிணறு தோண்டும் இயந்திரம்!

இந்தியாவுக்கு வருகிறது

விவசாயத்தையே நம்பி இருக்கும் மக்கள் வானத்தையே நம்பி இருந்த காலம் உண்டு.

வானம் பொய்த்துவிட்ட காலங்களில் விவசாயம் பாதிக்கப்படுவதைத் தடுக்க கிணறுகள் வெட்டியும், குழாய்கள் வைத்தும் ஓரளவு நிலைமையைச் சமாளித்து வந்தனர்.

ஆனால், எல்லா இடங்களிலும் கிணறு வெட்ட முடிவதில்லை—குழாய் இறக்கவும் முடிவதில்லை.

இந்தக் குறை நீங்கும் வகையில் பிரிட்டனில் ஒரு புதிய இயந்திரம் கண்டுபிடித்துள்ளனர். வறண்ட நிலமானாலும், பாறைப் பகுதியாயிருந்தாலும் நிலத்தை எளிதாகத் தோண்டக்கூடிய இயந்திரம் பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய சக்தி வாய்ந்த இயந்திரம் ஒன்று விரைவில் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்படும்.

சின்ன விஷயம்

காந்தியாருக்கு மதுக் காணிக்கை!

எலும்புத் துண்டு எதிரே இருக்கிறது என்பதற்காக எந்த நேர்மையாளனும், அதற்காக நாயாக மாறுவதில்லை! காங்கிரசுக்காரர்கள் மட்டும் இதற்கு விதிவிலக்கு!

அவர்களுக்கு—நான் இன்றையக் காங்கிரசுக்காரர்களைக் குறிப்பிடுகிறேன் — நேர்மை என்பது புரியாத விஷயம்; மானம் -- மனச்சான்று -- வெட்கம் -- இவற்றை அவர்கள் துறந்துவிட்டார்கள்!

'காந்தி நூற்றாண்டு விழா' என்று வட்டங் கட்டிப் பேசி -- முடியுமானால் காங்கிரசுக்குச் சாதகம் செய்துகொள்ள முனைகிறவர்கள் -- உள்ளபடி, காந்தியாரின் தத்துவங்களைக் காசுக்கு மதிப்பதில்லை!

மதுவிலக்கை எடுத்துக்கொள்ளுங்கள்; அது காந்தியாரின் உயிர்க் கொள்கைகளில் ஒன்று! அதைச் செயற்படுத்தக்கூட அவர்கள் மனம் ஒப்பவில்லை!

மதுவைக் கொண்டுவரக் காரணம் காட்டிச் சப்பைக் கட்ட நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்! முடிவு கட்டச் சந்தர்ப்பம் கிடைக்கிறபோதெல்லாம், சந்தடி காட்டாமல் தள்ளிப்போடுவதில் மெத்தக் கவனமாய் இருக்கிறார்கள்--காங்கிரசுக்காரர்கள்!

மதுவிலக்குப் பற்றி முடிவு ஏதும் எடுக்காமலே கூடிக் கூடிக் கலைவது அவர்களுக்கு வாடிக்கையாகிவிட்டது!

அண்மையில் காங்கிரசுப் பாராளுமன்றக் கட்சி கூடியது; சந்தர்ப்பவசமாகக் 'காந்தி' பேரைத் தம் பெயரின் பின்னாலே இணைத்துக்கொண்டிருக்கும் தலைமையமைச்சர் இந்திராவும் கலந்துகொண்டார்; அங்கே மதுவிலக்குப் பற்றி விவாதித்தார்கள்--அவ்வளவே!

முடிவு எடுக்கும் பொறுப்பைக் கோவாவில் கூடவிருக்கும் காங்கிரசுக் காரியக் கமிட்டி, அ. இ. கா. க.-வுக்கும் தள்ளிவிட்டுத் தப்பித்துக் கொண்டார்கள்!

வெட்கித் தலைகுனிய வேறென்ன செய்கை வேண்டும்?

இந்த மதுவிலக்கு, காந்தியாரின் உயிர்க் கொள்கை மட்டும் அன்று--அது,

இந்திய அரசியல் சட்டத்தின் வழிகாட்டித் தத்துவங்களில் ஒன்று!

அரசாங்கத்தின் கொள்கை பற்றிய 'வழிகாட்டித் தத்துவங்கள்' என்ற அதிகாரம், 'அரசியல் சட்டத்துக்கே தனிச் சிறப்பு அளிக்கும் அணிகலன்' என்கிறார்கள்! சட்டமன்றத்துக்கும், சட்டம் இயற்ற வழிகாட்டும் தத்துவங்கள் அவை!

"உலக நாடுகளிலேயே 'அயர் குடியரசை'த் தவிர வேறெந்த நாட்டின் அரசியல் சட்ட அமைப்பிலும் இதுபோல் தத்துவங்கள் இடம் பெறவில்லை"

என்று சட்டத் துறை வல்லார் புகழாரஞ் சூட்டுகிறார்கள்; அவ்வளவு கீர்த்தி மிக்கவை இந்த வழிகாட்டித் தததுவங்கள்!

எல்லாம் சரி; நடைமுறை.....?

சாணை, தானே வெட்டுவதில்லை; ஆனால், வெட்டுக் கத்தியைக் கூர்மை செய்கிறது! அதுபோலத்தான் வழிகாட்டித் தத்துவம்!

மற்ற எதெதற்கோ காந்தியாரைத் தேடி அலைகிறவர்கள், இந்த ஒன்றில் மட்டும் அவரை ஒதுக்கித் தள்ளுகிறார்கள்!

இந்திய மண்ணின் உன்னதமான தரும நியதிகளை உலக நாடுகளெல்லாம் பலபடப் பாராட்டுகின்றன; இங்கோ.....

நல்லது நத்தை வேகத்தில் பரவ --- தீயது சிறகடித்துப் பறக்கிறது!

தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் மதுவிலக்கில் காட்டும் உறுதியைக் குறைந்தபட்சம் அண்டை மாநிலங்கள் காட்டினால்கூடப் போதும் --- தென்னகம், வடநாட்டை வழிக்குக் கொண்டுவர முடியும்!

ஆனால், துரதிருஷ்டவசமாக, அங்கெல்லாம் காங்கிரசுககாரர்கள் அல்லவா ஆண்டுகொண்டிருக்கிறார்கள்?

இந்தியைத் திணிப்பதில் இவர்கள் காட்டுகிற ஆர்வம், இந்த மதுவிலக்குப் பிரச்சினையில் ஏனோ காணோம்!

மதுவிலக்கில் நம்பிக்கையே இல்லாத ஒருவர் அனைத்திந்தியக் காங்கிரசின் தலைவர்! நித்த நித்தம் குடிப்பதற்கான 'பெர்மிட்' வைத்திருப்பவர்கள் காங்கிரசின் தீவிர உறுப்பினர்களாம்! அவர்கள்தான் காங்கிரசை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்களாம்! பின் எப்படி மதுவிலக்குபற்றி முடிவு செய்யமுடியும்?

புதிதாக முடிவு எடுக்க இப்போது என்ன தேவை?

காந்தியார் நூற்றாண்டு விழா ஆண்டு இது! காங்கிரசுக்காரர்கள், தங்கள் காணிக்கையாக மதுவை அனைத்திந்திய அளவில் கொண்டுவரக்கூடும்; ஏனென்றால், அவர்கள் பெரும் பான்மையானவர்கள்!

பண்பும் ஒழுக்கமும் எப்போதும் சிறுபான்மைக் கட்சிதான்!

—பூரணன்

முரண்பட்ட அடிப்படையின் மீது மும்மொழித் திட்டம்

ஒரு மொழியை திணிக்க முயல்வதால் எவ்விதப் பலனும் ஏற்படாது

ஆதிபத்தியங்களால் நிரந்தரமான ஆட்சி மொழியை உருவாக்க முடிந்ததா?

சிக்கலுக்குத் தீர்வு காண கல்வி நிபுணர்கள் முன்வருவது அவசியம்---அமைச்சர் செ. மாதவன் கருத்துரை

சென்னை, ஆக. 16—

"ஆதிபத்தியங்களால் ஒருபோதும், ஒரு மொழியைத் திணித்துவிட முடியாது; மொகலாய சாம்ராஜ்யம் நிலவியது; அது இங்கே ஒரு மொழியைத் திணித்து -- நிரந்தர ஆட்சி மொழியாக அதனை ஆக்க முடிந்ததா?

"பிரிட்டிஷ் ஆதிபத்தியமும் ஆங்கிலத்தை இங்கே திணித்தது; அதன் ஆட்சிக்குப் பிறகு, ஆங்கிலத்தின் தகுதி குறைந்துகொண்டுதான் வருகிறது!

"ஆகவே, ஆதிபத்தியங்களால் ஒருபோதும் மொழிப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது; மொழியுடன் தொடர்புடைய பேராசிரியர்கள், கல்வி நிபுணர்கள் தான் மொழிச் சிக்கலுக்குச் சரியான தீர்வைக் காண இயலும்"

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கள், ஆக. 14-ம் நாளன்று லயோலா கல்லூரியில் -- ஆசிரியர்கள் சங்கத் துவக்க விழாவில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

என்ன இலாபம் என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்

'மொழிச் சிக்கலுக்குச் சிலர் மும்மொழித் திட்டத்தை ஒரு தீர்வாகக் கூறுகிறார்கள்.

'மும்மொழித் திட்டம்' என்பது, 'போலியானது' என்பது என்னுடைய கருத்தாகும்.

மும்மொழித் திட்டத்தின்கீழ் மூன்று மொழிகளை மாணவர்கள் படிக்க வேண்டும். தாய் மொழி, ஆங்கிலம், ஏதாவது ஒரு இந்திய மொழி இதுதான் மும்மொழித் திட்டம்; இதன்படி தென்னாட்டு மாணவன், தமிழ்—ஆங்கிலம்---ஏதாவது ஒரு இந்திய மொழி எனும் பெயரில் இந்தி மொழி படிக்கவேண்டும்; அப்படி அவன் இந்தி மொழி படிப்பதால் என்ன இலாபம்? வடநாட்டு மாணவன் தென்னாட்டு மொழியைப் படிப்பதால் என்ன இலாபம்? இதை நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும். அவ்விதம் எண்ணிப் பார்த்தால் தென்னாட்டு மாணவனுக்குப் பாதகம் ஏற்படுவது விளங்கும்!

எதற்காக இந்தி-- ஏன் இந்த முறை?

'மும்மொழித் திட்டம்' என்ற பெயரில் வடநாட்டிலும், தென்னாட்டிலும் அனைவரும் ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்கிறார்கள்; ஆகவே, ஆங்கிலம் அனைவருக்கும் தெரிந்த மொழியாகி விடுகிறது; அதுவே இணைப்பு மொழியாகவும் மாறிவிடலாமே ---பின் எதற்காக இந்தி?

'ஆங்கிலம் அந்நிய மொழி: ஆகவே அது வேண்டாம்' என்றால், பள்ளிப் பருவத்திலிருந்து அதை ஏன் சொல்லிக்கொடுக்க வேண்டும்?

இப்படி---முரண்பட்ட அடிப்படையின் மீதுதான் மும்மொழித் திட்டம் நிற்கிறது.

எப்படி நாம் நம்புவது?

மொரார்ஜி தேசாய் ஸ்ரீநகர் மாநாட்டில் தெளிவாகக் கூறினார்—'இன்னும் ஐந்து ஆண்டுகளில் ஆங்கிலம் அழிந்தொழிந்து போகும்' என்று; அவர் சொல்வது உண்மையானால், 'மும்மொழித் திட்டம் மெய்யானது—நிலையானது --- என்பதை நாம் எப்படி நம்புது?

வெறுப்பு எந்தநிலையில் இங்கு உருவாகிறது?

இந்திமீது நமக்கு வெறுப்பில்லை. நான்கூட எனது பட்டப் படிப்புக்காக (பி.காம்) இந்தி படித்திருக்கிறேன்.

இந்திப் பட இசையை விரும்பிக் கேட்கிறோம்; இந்திப் படங்களைக்கூட பார்க்கிறோம்; எங்கே எதிர்ப்பு வருகிறதென்றால்—இந்தியைப் படித்தால்தான் வேலை; அதுதான் உன்னை ஆளுகின்ற மொழி' என்கிறபோதுதான்!

எவர் தீர்வு காண இயலும்?

இந்தியாவின் கல்வியமைச்சர் டாக்டர் திரிகுண சென், பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராயிருந்த கல்வி நிபுணர்தான்; கல்வி நிபுணராய் இருந்த வரையில் அவர், சரியான கருத்தைக் கூறினார்; பதவியேற்றதும் அங்கொன்று கூறுகிறார் --- இங்கொன்று கூறுகிறார்! இதற்குக் காரணம் அரசியல் அழுத்தம்! ஆகவே, அரசியல் அழுத்தமுள்ளவர்களால் மொழிப் பிரச்சினைக்குச் சரியான தீர்வைக் காண முடியாது; பேராசிரியர்கள் --- கல்வி நிபுணர்கள்தான் அந்தத் தீர்வைக் கண்டு பிடித்து நாட்டின் சிக்கலைப் போக்க வேண்டும்!"

வெள்ளத்தைத் தடுக்க செஞ்சீன உதவியாம்!

பாகிஸ்தானில் ஏற்பட்டுவரும் வெள்ள ஆபத்தைத் தடுக்க சீனா உதவிபுரிய முன்வந்திருப்பதாக பாகிஸ்தான்வெளியுறவு அமைச்சர் அர்ஷத் உசேன் தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடம் சீனா அனுதாபம் கொண்டுள்ளதாகவும், தங்கள் நாட்டில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தக் கையாண்ட முறைகளைப் பாகிஸ்தானுக்குத் தெரிவித்து உதவிபுரிய அவர்கள் முன்வந்திருப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

முரட்டு பிடிவாதம் சுமூகத் தீர்வுக்கு இடையூறு

மிரட்டல்களுக்கு அரசாங்கம் பணியாது

தொழிலதிபர்கள் --- தொழிலாளர் தலைவர்களுக்கு அமைச்சர் செ. மாதவன் அறிவுரை

சென்னை, ஆக. 16—

"தொழில் தகராறுகளில் காலதாமதத்தைத் தவிர்த்துத் துரிதத் தீர்வு காண்பதற்கான ஒரு புதிய முறை குறித்து அரசு யோசனை செய்துவருகிறது; 'அற்ப காரணங்களுக்காகத் தொழிலாளர்களைப் பழிவாங்கக்கூடாது; வேலையை விட்டு நீக்கக்கூடாது' என்பது இந்த அரசின் கருத்து.

"தொழிற் சங்க இயக்கத்தை ஒடுக்கும் நோக்கத்துடன் தொழிலதிபர்கள் மனிதாபிமான உணர்வு இன்றி நடந்துகொள்ளக் கூடாது; அதே நேரத்தில், தொழிலாளர்கள் செய்யும் தவறுகளைக் கண்டிக்கும் துணிவு -- தைரியம், தொழிலாளர் தலைவர்களுக்கு இருக்க வேண்டும்.

"சில தொழில் தகராறுகளில் தொழில் அதிபர்கள், 'கவுரவப் பிரச்சினை' எனக் கருதி முரட்டுப் பிடிவாதம் பிடிப்பது சரி அல்ல; 'தொழிலாளர்கள் பணிய மறுத்தால், எங்கள் தொழிற்சாலையை இங்கிருந்து (தமிழ்நாட்டிலிருந்து) மாற்றி ஆந்திரத்திற்கோ, மைசூருக்கோ கொண்டு சென்றுவிடுவோம்' என்று அரசிடமே தொழில் அதிபர்களில் ஒரு சிலர் -- மிரட்டும் வகையில் -- சொல்லி இருக்கிறார்கள்; இது சரி அல்ல! இவ்விதப் போக்கு, தொழில் தகராறுகளில், சுமூகமான தீர்வுக்குக் குறுக்கே நிற்கும நிலையை ஏற்படுத்திவிடுகிறது!

"தொழிலதிபர்களேயானாலும் -- அவர்களும் -- மனிதாபிமான உணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டும்; இதுபோன்ற மிரட்டலுக்கெல்லாம் அரசு பணியாது; இதைக் சட்டபூர்வமாக எப்படிச் சமாளிப்பது என்பதும அரசுக்குத் தெரியும்; ஆந்திராவுக்கோ, மைசூருக்கோ மாற்றிவிடுவதால், அங்கு தொழிலாளர் பிரச்சினைகளோ, தகராறுகளோ ஏற்படாது என்பது கிடையாது.

"உடனடி வெற்றிக்காகத் தவறான முறைகளைத் தொழிலாளர் தலைவர்கள் சில நேரங்களில் கையாளுவதன் காரணமாக. முடிவில் தோல்வியே ஏற்படுகிறது. இதைத் தொழிலாளர் தலைவர்கள் உணர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

"அரசைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களின் நியாயமான -- சட்டபூர்வமான கோரிக்கைகளையும், அதற்காகச் சட்டத்திற்கு உடபட்டு நடத்தும் கிளர்ச்சிகளையும் ஆதரிக்கும."

— 'இந்தியன் ஆயில் கம்பெனி' சென்னைக் கிளை சிப்பந்திகள் இரண்டாம் ஆண்டு விழாவில்.

'பாத்திரம் தயாரிக்கும் தொழிற்சாலை தமிழ்நாட்டில் அமைக்கப்படுமா?

நாடாளுமன்றத்தில் தில்லைவில்லாளன் கேள்வி- 'திட்டம் எதுவும் தற்போது இல்லை' என்கிறார் அமைச்சர்

புதுடில்லி, ஆக. 14—

"இரஷ்யாவின் உதவியுடன் பாத்திரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைத் தமிழ்நாட்டில் அமைக்கும் திட்டம் உண்டா? இதுபற்றிப் பேச்சுவார்த்தை தொடங்கிவிட்டதா?

"இந்தத் தொழிற்சாலையைத் தமிழ்நாட்டில் அமைக்கும்படி மத்திய அரசிடம் தமிழக அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது; இது குறித்து மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது?"

என்று நாடாளுமன்ற மேலவையில், கழக உறுப்பினர் தில்லைவில்லாளன் வினவினார்; அமைச்சர் பக்ருதீன் அகமது இதற்குப் பதிலளிக்கையில், 'அதுபோன்ற திட்டம் எதுவும் தற்போது இல்லை" எனக் கூறிவிட்டார்.

'பதவி' எனும் அளவுகோல் இத்துடன் மறையட்டும்!

'தகுதி--திறமை--ஆற்றல்' என்ற அளவுகோல் இனியேனும் மலரட்டும்!

சென்னை, ஆக. 16—

"மேனாடுகளில் என்னைச் சந்தித்தவர்கள் எல்லாம், 'உங்கள் நாடடில் எத்தனைப் பள்ளிகள்--கல்லூரிகள்--மருத்துவமனைகள்-ஆலைகள் இருக்கின்றன' என்று கேட்டார்களே தவிர, ஒருவர்கூட, 'எத்தனை அமைச்சர்கள்' என்று கேட்கவில்லை!

"எனவே, 'ஒரு நாட்டின் முன்னேற்றம், கல்வியின் தரத்தில்---உடலின் ஆரோக்கியத்தில்--பேராசிரியரின் போதனைகளில்--கவிவாணர்களின் கற்பனையில்--உழவர்களின் வெற்றியில்---தொழிலாளரின் தொழிற் சிறப்பில்தான் இருக்கின்றன, அமைச்சர்களின் எண்ணிக்கையில் இல்லை' என்று அவர்கள் கருதுகிறார்கள்! ஆனால் நாமோ 'அவர் அமைச்சர் ஆனாரா?' என்ற அளவுகோலை வைத்துத்தான் பார்க்கிறோம்!

"மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்—அந்தப் பதவி எனும் அளவுகோல், இத்துடன் போகட்டும்! தகுதி--திறமை--ஆற்றல் எனும் அளவுகோலை வைத்து மதிப்பிடும் பழக்கம் தோன்றட்டும்!

"வாஷிங்டன் நகரில் அமெரிக்காவின் ஐக்கியத்திற்குப் போராடிய ஆபிரகாம் லிங்கனுக்கு ஒரு அழகான மணிமாடம் அமைத்திருப்பதுபோலவே, 'அமெரிக்கா பிளவுபட வேண்டும்' எனக் கூறிப் போராடிய ஜெனரல் லீ வாழ்ந்த வீட்டையும் தேசியச் சின்னமாக வைத்திருக்கிறார்கள்!

"'இங்கிலாந்தை அழிக்க வேண்டும்' என்று கருதி, அதை, 'இலட்சியம்' என்று கூறினான் நெப்போலியன்; உலகம், அதைப் 'பேராசை' என்றது; ஆனால், அந்த நெப்போலியனைப்பற்றி அவனது பிரான்சு நாட்டைச் சார்ந்தவர்கள் அறிந்திருப்பதைவிட அதிகமாக ஆங்கிலேயர்கள் அறிந்திருக்கிறார்கள்!

"எதிர்த் தரப்பினருக்கும் உரிய மரியாதை காட்டவேண்டும் என்ற பண்புக்கு உதாரணமாக--பெரிய உதாரணங்கள் கிடைக்கவில்லை என்பதால், இந்தச் சிறிய உதாரணங்களைக் கூறினேன்.

"இந்தப் பண்பும், தோழமையும் கட்சித் தலைவர்களுக்கு மட்டுமல்லாமல் கட்சித் தொண்டர்களுக்கும் ஏற்படவேண்டும் என விரும்புகிறேன்."

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், ஆக. 13-ஆம் நாளன்று கோகலே மண்டபத்தில் சிறப்புரையாற்றுகையில் விளக்கிக் கூறிக் கேட்டுக்கொண்டார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

அனைவரையுமே நான் பெரிதும் மதிக்கிறேன்

என்னுடைய நெஞ்சில் உள்ளதைக் கூறுகிறேன் --- கள்ளங்கபடமில்லாமல் கூறுகிறேன்---பேச்சாகக் கூறவில்லை---எந்தப் பலனையும் எதிர்பார்த்துக் கூறவில்லை --- மற்றக் கட்சிகளிலுள்ள எல்லோரையும் மதிக்கிறேன்! மரியாதைக் குறைவான எண்ணம் எனக்கு ஒரு துளியும் கிடையாது!

நான் எளிய--ஏழைக் குடியில் பிறந்தவன்; கல்லூரியில் நான் படிப்பேனா என்று ஜோசியம் பார்க்கவேண்டிய நிலையில் இருந்தவன்!

அதையெல்லாம் மறந்துவிட்டு, இன்று வந்த பதவியினால் தலைகனத்துப்போய், 50 ஆண்டுகளாக நான் பயின்ற பண்பாட்டை இழக்கச் சம்மதிக்க மாட்டேன்!

பதவி இன்று வரலாம்—நாளை போகலாம் — ஆனால், பண்பாட்டைப் பெறுவது கடினம்!

பெறமுடியாத பண்பாட்டைப் பெற்றுவிட்ட பிறகு, அந்தப் பண்பாட்டை இழக்கும் பேதையாக ஒருபோதும் மாற மாட்டேன்!

இன்னொன்றையும் நான் இந்தச் சமயத்தில் கூறிக்கொள்வேன்-பதவியில் இருப்பவர்களை மட்டும் பாராட்டுகிற--போற்றுகிற--நம்புகிற---வரவேற்கிற இயல்பு எந்த அளவுக்கு நம் நாட்டில் குறைகிறதோ அந்த அளவுக்கு சனநாயகம் மேம்படும்."

நீதித் துறையின் சுதந்தரத்துக்கு மேலும் ஒரு தடையா?

சுதந்தரமாகச் செயல்படுவதைத் தடுக்க நிர்வாகத் துறைக்கு வாய்ப்பளிப்பதா?

நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்யும் மசோதா — வெ. கிருஷ்ணமூர்த்தி கடும் எதிர்ப்பு

புதுடில்லி, ஆக. 16—

தலைமை உயர் நீதிமன்றம், அல்லது உயர் நீதிமன்ற நீதிபதிகள் திறமையின்றியோ, தவறான முறையிலோ செயல்படுவதாயிருந்தால், அவர்களைப் பதவி நீக்கம் செய்யும்படி, குடியரசுத் தலைவரை கேட்டுக்கொள்ளும் அதிகாரத்தை மேற்கொள்ளும் மசோதா ஒன்றை உள்துறை அமைச்சர் சவான் மக்களவையில் கொண்டு வந்தார்.

இம்மசோதாவுக்கு கழக உறுப்பினர் வி. கிருஷ்ணமூர்த்தி தனது எதிர்ப்பைத் தெரிவித்தார்; அவர், 'நீதித் துறை சுதந்தரமாகச் செயல்படுவதைத் தடுக்க நிர்வாகத் துறைக்கு ஒரு சந்தர்ப்பமளிக்கும் வாய்ப்பைத்தான் இம்மசோதா ஏற்படுத்து கிறது' என்று கூறினர்.

மேலும் அவர் கூறியதாவது :—

"தேவையில்லாத இம்மசோதா, தேவையில்லாத நேரத்தில்—

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பார்த்துக் கொள்ளத்தானே வேண்டும்! ஆகஸ்டு 15—அத்தகைய கனவுப் பார்க்கும் நாள!

காண்கின்றேம்—கைகட்டி வாய் பொத்தி நின்றிருந்த நிலை இல்லை! எங்கும் நம்மவர்களே அரசோச்சுகின்றனர்! எழில்மாடக் கூடங்கள், தொழிற்சாலைகள், அறிவாலயங்கள், மருத்துவமனைகள், புத்ய பாதைகள், பாங்கான பணிமனைகள் எழும்பியுள்ளன! உற்பத்தி பெருகி, நாட்டுப் செல்வம் வளருவது தெரிகிறது.

ஆனால் இவர்கள் பளிச்சிட்டுக் கொண்டிருக்கும்போதே, பிறி தோர் புறம் சேரிகள்—சகதி நிறை இடங்கள்—கூரைகள்—குமுறிக்கிடக்கும் மக்கள்—வேலையில்லாதார் தொகை களிற் திடக் காண்கின்றோம்!

பாலைகளோ, பள்ளங்களோ, பாங்கான மாளிகைகளோ, சிங்காரத் தோட்டங்களோ, வெனீயர்கூட அமைத்தனர்—ஓரளவு; ஆனால், 'இவை, பள பளப்பூட்டும் முறை; புண்ணுக்குப் புனுகு பூசும் வழி; மனவசக் கத்தைத் தருவதற்காகச் செய்யப்படுவை; உண்மை இன்றியா இது அலல; அந்த இந்தியா இருளில் கெளிகிறது—வலமையில் உழல்கிறது' என்று கூறி லோம்! உண்மையைக் கூறி லோம்!

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆன பிறகு, 'ஈமும் சில புதிய வளங்கள் பெற்றுள்ளோம்' என்பதை மட்டும் எடுத்துக்காட்டினால், 'இது போதுமா' என்ற கேள்வியும், 'சாமானியர்களின் வாழ்வு செம்மைப்பட்டதா' என்ற கேள்வியும் எழத்தானே செய்யும்? பிறர் கேட்பானேன்—நாமே நம்மைக் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி அல்லவா அது?

அந்தக் கேள்வியைக் கேட்டு பதிலறிந்து, தெளிவும் ஆர்வமும் பெற்றுப் பணியாற்ற வேண்டுமெனை அழைப்பு விடுத்திடும் நல்ளுள்—ஆகஸ்டு 15!

"அஞ்சா நெஞ்சினரே! 'அனத்தையும் இழந்தேனும் -- சுதந்தரம் பெற்றுத் தீருவோம்' என்ற உறுதி கொண்டோரே! தியாகச் செம்மல்களே! வாரீர்! நாட்டு விடுதலைக்காக அறப் போர் நடாத்திட வாரீர்!" என்று சுதந்தரப் போராட்டத்துக்கான அழைப்பைக் காந்தியடிகள் விடுத்தார்; மக்கள் திரள் டெழுந்தனர் -- போர்த் தொடுத்தனர் -- வெற்றி கண்டனர்!

இப்போது அழைப்பு வேறெவருக்கு விடுத்திட வேண்டும் -- இன்று எத்தகைய செயல் வீரர் தேவை -- என்பது பற்றிச் சிந்தித்திட வேண்டும்.

மறைந்த லால்பகதூர், 'மூவர்

தேவையில்லாத முறையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

"இப்பொழுதே நீதித் துறை மில் பல தொல்லைகள் உள்ளன. இம்மசோதா, நீதித் துறையின் சுதந்தரத் தன்மைக்கு மேலும் ஒரு தடையாகும். இப்படி ஒரு மசோதா கொண்டுவருவதற்கு முன் அசாதாரண சூழ்நிலை என்ன ஏற்பட்டிருக்கிறது என்பது புரியவில்லை."

வாழ்க! உழவர் வாழ்க!' என்று முழங்கினர்.

பெற்ற சுதந்தரத்தைப் பிறநாட்டவன் எவனும் அழித்திட முனைந்திடில், அவனே அடித் தொழித்து நாட்டின் மானத்தையும், சுதந்தரத்தையும் பாதுகாத்திட படைவீரர் தேவை—நீரம்பு உளர் — தமது ஆற்றலையும் உலகுக்கு எடுத்துக்காட்டி அமியாட் புகழ் பெற்றுக் குவித்தனர்.

அங்கியரால் ஏற்படக்கூடிய ஆபத்தைவிடக் கொடுமை யானது—'சுதந்தரம் வந்து நாம் கண்ட சுகம் என்ன' என்ற சலிப்பு உணர்ச்சி! அந்த சலிப்பு புணர்ச்சி, வாழ்வில் வளம் காணுதோருக்குமுத்தான் செயும்.

"அங்கியர் சுரண்டுகின்றனர்—நாம் அவதிப்படுகிறோம்! அவர்கள் பருகுவது இனிப்புச் சாறு—நமக்குக் கிடைப்பதோ வெறும் சக்கை! அவர்களுக்குக் சிங்கார மாளிகை; செல்வ மிளுக்குகள்—நமக்கோ ஓட்டைக்குடிசை ஒடிந்த வாழ்வு" என்று ஏழை எளியோர் குமுறிடும்போது, சேரதன்மக்கு இடைவிலேயும் ஓர் நம்பிக்கை தவழ்ந்திட முடிந்தது—'அங்கிய ஆதிக்கம் அகற்றப்படுமானால் அக்கிரமம் அழிந்துபடும்; நீதி நிலைத்திடும்; நிம்மதி பிறக்கும்' என்ற நம்பிக்கை!

சுதந்தரம் கிடைத்தான பிறகு, 'வலியோர் சிலர் எளியோர் நமை வதை புரிவதும்' இருந்து வரின் வேதனையுடன், தீக்கைப்பல்லவா மக்கள் உள்ளத்திலே கொழித்திடும்!

"வந்த சுதந்தரம் யாருக்கு? நமக்கு இல்லைபோலத் தோன்றதே! நமது வாழ்வில் எந்த மாற்றமும் காணுமே!" என்ற கேள்விகள் மனதைக் குடையும்போது, உள்ளம் எரிமலை யாகி விடுமே!

பிறகு, அமைதி எங்ஙனம் நிலைத்திடும்—சமூகக் கட்டுக்கோப்பு எப்படிக் கெட்டிப்படும்?

'பெற்ற சுதந்தரம், ஒரு சிலருக்காக அல்ல—அனைவருக்கும்; நாட்டுச் செல்வமும் வளமும் ஒரு சிலருக்காக அல்ல—அனைவருக்கும்; பாடுபடுவதும் பலன் பெறுவதும் போது நீதியாக இருந்திட வேண்டும்; 'பாடுபட்ட பல்லோர்; பலனோ

நாமக்கல் வட்ட தி. மு. க. தேர்தல்

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினொட்டி 20—8—68 செவ்வாய் காலை 10 மணிக்கு நாமக்கல் பி எஸ் ஆர். திடலில் நாமக்கல வட்ட தி. மு. க. தேர்தல் நடைபெறும். தோழர் ஓ. எஸ். பாலசுந்தரம், தேர்தல் ஆணையாளராகப் பொறுப்பேற்றுத் தேர்தலை நடத்தி வைப்பார்.

11—8—68 அன்று நடைபெற விருந்த வட்டக் கழகத் தேர்தலுக்கு அறுப்பப்பட்ட பிரதிநிதிகள் அடையாளச் சீட்டு கஸியே கொண்டுவர வேண்டு கிறோம்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

பெரும் இழப்பில் இயங்குகிறதாம் கல்கத்தா துறைமுகம்

"கல்கத்தா துறைமுகம் தொடர்ந்து பெரும் இழப்பி லேயே இயங்கிக் கொண்டிருக் கிறது"

என கப்பல்துறை அமைச்சர் வி. கே ஆர். வி. ராவ், நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

"1965-லிருந்து 1968 வரையில் இத்துறைமுகத்தில் ரு. 5.86 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கி றது" என அவர் அறிவித்தார்.

கோவை மாவட்ட தி. மு. க. தேர்தல்

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி கோவை மாவட்ட தி. மு. கழகத் தேர்தல் 18—8—68 காலை 10-மணிக்கு கோவை நகரக் கழகக் கட்டிடத்தில் ஆணையாளர் ப. உ. சண்முகம் எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (நி.மு.க.)

சேலம் மாவட்ட தி. மு. க. தேர்தல்

ஏற்கனவே விடுதலிருந்த அறிவிப்பினையொட்டி சேலம் மாவட்ட தி. மு. க. தேர்தல் 25—8—68 ஞாயிறு காலை 10 மணிக்கு சி. சிட்டிபாபு எம்.பி. அவர்களே ஆணையாளராகக் கொண்டு சேலம் நகர் விசயராகவாச்சாரியார் திடலில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (நி.மு.க.)

தெ. ஆ. மாவட்டக் கழகத் தேர்தல்

14—8—68-ம் நாள் வெளியிடப்பட்ட தென் ஆற்காடு மாவட்ட தி. மு. கழகத் தேர்தல் நாள், இடம் ஆகியவற்றை கீழ்க்கண்ட வாறு திருத்தி அறிவிக்கப்படுகிறது.

8—8—68 ஞாயிறு காலை 10 மணிக்கு கடலூர் முனிசிபல் பயணியர் விடுதியில் தெ. ஆ. மாவட்டக் கழகத் தேர்தல் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (நி.மு.க.)

நீலகிரி மாவட்டக் கழகத் தேர்தல்

நீலகிரி மாவட்டக் கழகத் தேர்தல் 18—8—68 காலை 10 மணிக்கு உதகை நகரிலுள்ள தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெறும். தேர்தல் ஆணையாளர் : வை. இரத்தினவேலு பி ஏ.

—தலைமைக் கழகம் (நி. மு. க.

நடக்க இருப்பவை

17—8—68

திருக்கோவிலூர்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு சன்னதி வீதியில்; தலைவர் : ஜே. புஷ்பாநாதன்; பேசுவோர் : மு. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., ஏ. வி. பி. ஆசைத் தம்பி எம்.எல்.ஏ., ச. சி. அன்பரசு, இரா. குலசேகரன், டி. என். ஜி. ஏ. மோகன், வரதராசன், தி. வ. செபராமன், மு. பூமாறன் மற்றும் பலர்.

கொடுமுடி

தி. மு. க.— எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றம் ஆகியவை சார்பில் மாலை 7 மணிக்கு பெரிய கோயில் முன்னியில்; தலைவர் : கே. இராசலிங்கம் ; பேசுவோர் : சி. தமிழரசி பி.ஏ., மார். சுப்பிரமணியம் பி.ஏ.பி.எல்., க. அன்பரசு, மற்றும் பலர்.

திருவையாறு

மக்கள் திலகம் மன்ற முதலாவது ஆண்டு நிறைவு விழா; மாலை 7-மணிக்கு மேல வீதியில்; தலைவர் : கு. நடராசன் ; பேசுவோர் : பெரியார் ஈ. வெ. ரா., இரா. இராசகோபால், துரை. வையாபுரி, புலவர் க. முருகேசன் எம்.எல்.ஏ.

வள்ளிபட்டி, அழகாபுரி

தி. மு. கழகக் கிளைகள் சார்பில் பாராட்டுக் கூட்டம் ; மாலை 7-மணிக்கு அழகாபுரி அண்ணா திடலில்; தலைவர் : ச. சுப்பையா; பாராட்டுப்பெறுவோர் : ப. முத்து சாமி பி.ஏ.,பி.எல்., வி. நாகசுந்தரம், எம். கே. ஏ. சாமி, ப. குணசேகரன்; பாராட்டுவோர் : ஓரா. இராமலிங்கம் பி.ஏ.,பி.எல்., கே. எல். வெள்ளச்சாமி, சு. வே. ஆறுமுகம், வே. சுப்பையா. (தேவராசன்—நிர்மலா குழுவினரின் 'அண்ணுவின் அரசு' என்னும் கலா நிகழ்ச்சி நடைபெறும்.)

விழுப்புரம் வட்ட தி.மு.க. தேர்தல்

14—8—68 'நம் நாடு' இதழில், விழுப்புரம் வட்ட தி.மு.க. தேர்தல் சமபந்தமாக வெளியிடப்பட்ட அறிவிப் பினைக் கீழ்க்கண்டவாறு திருத்தி அறிவிக்கப்படுகிறது :—

"தெ. ஆ. மாவட்டம் விழுப்புரம் வட்ட தி. மு. கழகத்தின் அவைத் தலைவர் பொறுப்பு தவிர, மற்ற எல்லாப் பொறுப்புகளுக்குமான தேர்தல் 1—8—68 ஞாயிறு காலை 10 மணிக்கு, விழுப்புரம் முனிசிபல் பயணியர் விடுதியில் நடைபெறும்; தேர்தல ஆணையாளர் : சா. கணேசன் எம்.சி.

—தலைமைக் கழகம் (நி.மு.க.)

பிரபல வடநாட்டு நடிகர் மீது வழக்கு பதிவு

பம்பாய், ஆக. 16—

பிரபல வடநாட்டு நடிகர் திலீப் குமார், 1963-64-ஆம் ஆண்டில் ரு. 7 இலட்சம் வரி தராமல் ஏய்த்ததாக, அவர்மீது வருமான வரித் துறையினர் வழக்கு ஒன் றைப் பதிவு செய்துள்ளனர்.

பேற ஒரு சிறு பிரிவினர்' என்ற நிலே இருத்தல் கூடாது" என்ற பொது நீதி, வேறும் நல் லரையாக மட்டும் இருந்து விடாமல், நடைமுறையாதல் வேண்டும்; நாடு அப்போது தான் புத்தோளி பெற்றிடும்— புதுவாழ்வு பெற்றிடும்!

(பேச்சின் பிற்பகுதி காளை)

சென்னை மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகட்கு:

"18—8—68 ஞாயிறு காலை 10 மணியளவில், தேனும் பேட்டை 'அன்பகத்'தில், சென்னை மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும்; அதபோது, பேரறிஞர் அண்ணு அவர்களின் 60-வது பிறந்த நாள் விழாவினச் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்து முடிவு செய்யப்படவிருப்பதால், பிரதிநிதிகள் அனைவரும் தவருது வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று மாவட்டச் செயலாளர் நீலகாரயணன் அறிவிக்கிறார்.

பேசின்பிரிட்ஜ் பகுதி தி.மு.க. தோழர்கட்கு :

"18—8—68 காலை 10 மணியளவில், எண்-9, மின்ட் சுப்பராயலு நாயுடு தெருவிலுள்ள பள்ளியில் (22-வது வட்டம்) பேரறிஞர் அண்ணு அவர்களின் மணிவிழா வினியோடு, பகுதிக் கழக உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்; அது போது, பகுதிக்கழக உறுப்பினர்களும், மாகராட்சி மன்ற உறுப்பினர்களும் தவருது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறேன"

என்று, பகுதிச் செயலாளர் மா. மோகனரங்கம் எம்.சி. அறிவிக்கிறார்.

சென்னை 74-வது வட்ட தி.மு.க. தோழர்களுக்கு :

"சென்னை 74-வது வட்ட தி.மு.க. கினியின் ஆலோசனைக் கூட்டம் 17—8—68 இரவு 8 மணியளவில், கழகப் பணிமனியில் நடைபெறும்; பேரறிஞர் அண்ணு அவர்களின் மணிவிழாவைப் பற்றி ஆலோசிக்க இருப்பதால், கழக உறுப்பினர்கள் அனைவரும் தவருது வருகைருமாறு; கேட்டுக்கொள்கிறேன்"

என, வட்டச் செயலாளர், க. நடராசான் அறிவிக்கிறார்.

சென்னை 15-வது வட்ட தி.மு.க. தோழர்களுக்கு :

"பேரறிஞர் அண்ணு அவர்களின் 60-வது ஆண்டு மணிவிழாவைச் சிறப்புடன் கொண்டாடுவது பற்றி ஆலோசிக்க 15-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், 22—8—68 மாலை 7-மணிக்கு, எண் 128, புதுத் தெருவில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்; எனவே, கழகச் சார்பில் அனைவரும் தவருது தலைமைக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்" என, வட்டச் செயலாளர் ந. முருகேசன் அறிவிக்கிறார்.

சென்னை 10-வதுவட்ட கருணாநிதி நற்பணி மன்றத் தோழர்கட்கு :

"18—8—68 காலை 10-மணியளவில், அறிஞர் அண்ணு அவர்களின் மணிவிழாவினச் சிறப்புற நடத்துவது பற்றி ஆலோசிக்க இருப்பதால், உறுப்பினர்கள் அனைவரும் தவருது வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்" எனச் செயலாளர் நா. தமிழன்பன் அறிவிக்கிறார்.

ஓரவில் முன்னேற்றக் கழகத்தின்தலைவரும், நிரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியீட்டு பயாசகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அறிவிப் அச்சகத்தில் (24, குன்றைரராவன் செட்டி தெரு, சென்னை-1) அச்சிடப் பெலிசிட்டு வெளியிடப்பட்டது.